14

# "இரட்டைக் குழந்தைக் கர்ப்பம்"

## உங்கள் கர்ப்பம் இரட்டைக் குழந்தைகளாக இருந்தால்



## அறிந்து கொள்ள சில விடயங்கள்

ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் ஒருவேளையில் உருவாவதற்கான சந்தர்ப் – பத்தை அதிகரிக்கும் காரணிகள்.

1. பரம்பரை
2. தாயின் வயது அதிகரித்துச் செல்லல்- (40 ற்கு அண்மை)
3. குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்தல் (எத்தனையாவது குழந்தை)
4. செயற்கைமுறை கருத்தரிப்பு, சோத- னைக்குழாய் குழந்தைகள்

இரண்டிற்கு மேற்பட்ட குழந்தைகளும் நல்லமுறையில் வளர்ச்சியடையலாம். ஆயினும் ஒவ்வொரு கர்ப்பமும் கவனிக்- கப்பட வேண்டியதே

இரட்டைக் குழந்தைகள்

* ஒத்த இரட்டையர் (இருவரும் ஆண் அல்லது இருவரும் பெண்)

* வித்தியாச இரட்டையர் (ஒருவர் ஆண், ஒருவர் பெண்)



ஒத்த இரட்டையர்,

* பால்,
* பரம்பரை இயல்பு,
* உருவ அமைப்பு

அனைத்திலும் ஒத்திருப்பர்.

## காலத்தின் போது கண்டறிவது எப்படி?

* தலைச்சுற்று, வாந்தி என்பன தனி ஓர் குழந்தையிலும் பார்க்க அதிகமாயிருக்கலாம்.
* இரத்த அழுத்தம் அதிகரித்துக் காணப்படலாம்.
* வயிறு அதிகளவு பெரிதாயிருக்கும்
* குழந்தைத்துடிப்பு அதிகமாயிருக்கும்.
* கர்ப்பகாலத்தின் பிற்பகுதியில் களைப்பு சுவாசவீதம் அதிகரித்தல், அசௌகரியம் என்பன ஏற்படும்.
* குருதிச்சோகைக்குரிய அறிகுறிகள் தென்படும்.

  *கண், நாக்கு வெளிறிக் காணப்படலாம்.*
  *களைப்பு, படபடப்பு ஏற்படலாம்.*
* கால்களில் வீக்கம் ஏற்படலாம்.

இரட்டைக்குழந்தைகள் கருப்பையில் வளர்வதால் கர்ப்பகாலத்தில் ஏற்படும் பிரச்சினைகள்

## குழந்தைக்கு ஏற்படும் பிரச்சினைகள்

1. குறைப்பிரசவம் ஏற்படலாம்
2. குழந்தைகள் இரண்டினதும் அல்லது ஒன்றினது வளர்ச்சி கருப்பையினுள்ளேயே பாதிப்படையலாம்.
3. குழந்தைகள் இரண்டினதும் அல்லது ஒன்றினது பிறப்பு நிறை குறைவடையலாம்.
4. ஒரு குழந்தை விருத்தியடையாது இறக்கக் கூடும்
5. குறைபாடுள்ள குழந்தையாக வளர்ச்சியடையலாம்.

## தாய்க்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகள்

1. குருதிச் சோகை
2. கர்ப்பத்தால் தூண்டப்பட்ட உயர் குருதியமுக்கம்
3. வெரிக்கோஸ் நாளம் (Vericose veins)
4. கால், உடல் வீக்கம்

## பிரசவத்தின்போது ஏற்படக்கூடிய பிரச்சனைகள்

- சாதாரண பிரசவத்திற்கு ஏற்றவாறில்லாமல் குழந்தையின் நிலை மாறி இருத்தல்



- முதற் குழந்தை பிறந்ததும், மற்றைய குழந்தையின் நிலை திடீரென மாற்றமடைதல்

  இதனால் உடனடியாக சத்திர சிகிச்சை செய்யப்பட வேண்டி வரலாம்.

- இரண்டாம் குழந்தையின் தொப்பூழ் கொடியானது முதற் குழந்தையுடன் வெளியேறலாம்.

  இதனால் இரண்டாம் குழந்தைக்கு
  - ★ மூச்சுத்திணறல் ஏற்படும்
  - ★ இறக்கவும் கூடும்

- பிரசவத்தின் போதும், பின்னரும் குருதியிழப்பு அதிகமாக இருக்கலாம்.

- பிறப்பு நிறை குறைந்த குழந்தைகளாக இருக்கலாம்.

- எனவே தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயமுண்டு.



- குழந்தைகள் இரண்டும் ஒட்டிப் பிறக்கலாம்

-சமுதாய மருத்துவத் துறை-
யாழ் மருத்துவபீடம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க
ஆதரவில் வெளியிடப்பட்டது.

Printed at STP Computer World (Pvt) Ltd.